உ

சிவமயம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்

பிரித்தானியாவை வதிவிடமாகவும் கொண்டு

அமரத்துவமடைமந்த

அமரர் திரு **கந்தையா மாணிக்கவாசகர்**

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

**11.06.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அன்னை மடியில்

27 * 10 * 1940



ஆண்டவன் அடியில்

30 * 04 * 2017

# அமரர் திரு கந்தையா மாணிக்கவாசகர்

## திதி வெண்பா

ஆண்டு ஏவிளம்பி அமைந்த சித்திரைத்திங்கள்
பூண்ட பூர்வ பக்க பஞ்சமியில் - மாண்பு
கந்தையா மைந்தன் மாணிக்கவாசகர் ஐயன்
எந்தையீசன் கழலடைந்தான் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தேவாரம்

## முதலாம் திருமுறை

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையயமல ரான் முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

## இரண்டாம் திருமுறை

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே

## நாலாம் திருமுறை

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டு முடனே
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

## ஐந்தாம் திருமுறை

மாசில் வீணையும் மாலையும் மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தனை யிணையடி நிழலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாம் திருமுறை

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமுஞ் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சந்துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே

## ஆறாம் திருமுறை

பித்தாபிறை சூடிபெரு மானே அருளாளா
எத்தால்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாயினி அல்லேலென லாமே

## திருவாசகம் (எட்டாம் திருமுறை)

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா (ஒன்பதாம் திருமுறை)

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு (ஒன்பதாம் திருமுறை)

பாலுக்குப் பாலகன்வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவி லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புரிய வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமைந்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமி அந்தாதி

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே

தனம் தருமகல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந்தரும் வஞ்மில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்களே செய்து பாழ்நகரக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்டோடென்ன கூட்டினையே

பூத்தவளே புவனம்பதினானகையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னைஅண்டி மற்றோர்தெய்வம் வந்திப்பதே

சொல்லும் பொருளும்..
ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சரவண பவ

## கந்தர் கஷ்டி கவசம்

### காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும்கைகூடும் நிமலர்அருள் கந்தர்
சஷ்டிகவசந்தனை

குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மையல் நடஞ் செய்யும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க வென்று வந்து
வர வர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியுங்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்றேன் முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலியாஞ் சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணி முடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்(து) உதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா விநோதன் என்(று)
உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என் தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதி செவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில் வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணை வேல் காக்க
முன்கை இரண்டும் முரண் வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனைய வேல் காக்க
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இதுதுன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரமும் மிகு பல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதர்கள் எனைக் கண்டால் கலங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலற மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கள்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைதாள் சிலந்தி
பற்குத்து அரணை பரு அரையாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுரபவனே திக ழொளி பவனே
பரிபுர பவனே பவம் ஒழிபவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துக் தேவர்கள் கடுஞ் சிறைவிடுத்தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த, இனிய வேல்முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவின் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா
சமராபுரி வாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவிநன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறு உருக்கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அட்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலார் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலான் கவசத்தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத்தேழ்வர்க் குவந்த முதளித்த
குபேரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக்குழந்தை சேவடி போற்றி
என்னைத் தடுத்தாட் கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி துணை

ஓம் சக்தி

# கௌரிக் காப்பு

விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின்றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்ற மொரு பொருட் குற்றம் சோர்வு தரும்
எக் குற்றமும் வராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியாரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்னுள் இருந்தே என்னைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகாதேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க் கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனே எண்ணியல்லோ சங்கரி நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி யொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகையாற்றும் படலமிதை வழி வழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுக
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமாரியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசத்தி தாயவளே
எட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே வாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைநீக்கிக் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றி விட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகி வரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமம் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலையாய் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண் திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவியளரி வோர்க்கு
சிந்தி யெல்லாந்தருவாள் பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சக்தி லோர்களெல்லாம் ஏற்றியும்மைப் போற்றுவோர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறை அணிந்துவர முன் வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் குமர குருதாச குருப்யோ நம

## பகை கடிதல்

திருவளர் சுடர் உருவே, சிவை கரம் அமர் உருவே
அருமறை புகழ் உருவே, அறவர்கள் தொழும் உருவே
இருள் தபும் ஒளி உருவே, எனநினை எனது எதிரே
குரு குகன் முதல் மயிலே, கொணர்தியுன் இறைவனையே

மறைபுகழ் இறைமுனரே, மறை முதல் பகர் உருவே
பொறைமலி உலகு உருவே புனநடை தரும் உருவே
இறைஇள முக உருவே, என நினை எனதெதிரே
குறைவரு திருமயிலே, கொணர்தியுன் இறைவனையே

இதரர்கள்பலர் பொரவே, இவண் உறை எனதெதிரே
மதிரவி பலவெனதேர் வளர்சரண் இடையெனமா
சதுரொடு வரு மயிலே, தடவரை அசை வுறவே
குதிதரும் ஒருமயிலே, கொணர்தியுன் இறைவனையே

பவநடை மனுடர்முனே படர்உறும் எனதெதிரே
நவமணி நுதலணியேர் நகைபல மிடறணிமால்
சிவணிய திருமயிலே திடனொடு நொடிவலமே
குவலயம் வருமயிலே கொணர்தியுன் இறைவனையே

அழகுறு மலர்முகனே அமரர்கள் பணிகுகனே
மழஉரு உடையவனே மதிநனி பெரியவனே
இழவிலர் இறையவனே எனநினை எனதெதிரே
குழகது மிளிர்மயிலே கொணர்தியுன் இறைவனையே

இளையறும் அறுமுகனே இதச்சி மருமகனே
இணரணி புரள்பயனே, எனநினை எனதெதிரே
கணபண அரவுரமே கலைவுறு எழுதருமோர்
குணமுறு மணிமயிலே கொணர்தியுன் இறைவனையே

எளியஎன் இறைவ குகாஎனநினை எனதெதிரே
வெளிநிகழ் திரள்களைமீன் மிளிர்சினை எனமிடைவான்
பளபள எனமினுமா பலசிறை விதிதரு நீள்
குளிர்மணி விழிமயிலே கொணர்தியுன் இறைவனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகயில் மயில்முருகா எனநினை எனதெதிரே
பலபல களமணியே பலபல பதமணியே
கலகல கலவெனமா கவினொடு வருமயிலே
குலவிடு சிகைமயிலே கொணர்தியுன் இறைவனையே

இகல்அறு சிவகுமரா எனநினை எனதெதிரே
சுகமுனிவரர் எழிலார் சுரர்பலர் புகழ்செயவே
தொகுதொகு தொகுவெனவே சுரநட மிடுமயிலே
குகபதி அமர்மயிலே கொணர்தியுன் இறைவனையே

கருணைபெய் கனமுகிலே கடமுனி பணிமுதலே
மருணையன் அரன்எனவே அகம்நினை எனதெதிரே
மருமலர் அணிபலவே மருவிடு களமயிலே
குருபல அவிர்மயிலே கொணர்தியுன் இறைவனையே

## ஓம் ஸ்ரீ சாயிராம்

## 20.06.1977ம் திகதியன்று சமஷ்டி உபநயன தினத்தில் பகவான் பாபா அருளிய தெய்வீகப் பேருரை

ஓம் பூர் புவ ஸ்வ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந ப்ரசோதயாத்

மனித குலத்தின் மிகப் புராதன நூல்களான வேதங்களில் கூறப்பட்ட "காயத்ரி" என்பது சர்வ லோகத்திற்கான பொதுப் பிரார்த்தனையாகும்.

எந்த ஒன்றிலிருந்து பிரபஞ்சத்தில் உள்ள எல்லாமே பிறந்தனவோ, அதை ஸவீதா என்று அழைக்கின்றோம். ஸவருதா என்னும் பெயர் தவிர வேறொரு நாமம் இல்லாத கடவுள், எல்லாவற்றையும் கடந்து விளங்குகின்றார். "காயத்ரி என்பது இத்தகைய கடவுளைக் குறித்துச் சொல்லும் மந்திரமாகும். காயத்ரி ஐந்து முகங்களைக் கொண்டதாக நாம் உருவகம் செய்கின்றோம். காயத்ரி மந்திரத்தில் மூன்று பகுதிகள் உள்ளன.

1. துதித்தல்
2. தியானம்
3. பிரார்த்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பகுதி கடவுளைப் போற்றித் துதிக்கின்றது. அடுத்தபடியாக பக்தி மேலிட்டு அதனையே தியானிக்கிறோம். இறுதியாக "மனிதனின் விவேகத்தையும் அறிவையும் விழித்தெழச் செய்து, அவைகளுக்கு வலுவூட்ட வேண்டும்" என்கின்ற பிரார்த்தனையை "காயத்ரி" உள்ளிட்டதாகும்.

## யோகர் சுவாமிகள் மகாவாக்கியங்கள்

ஒரு பொல்லாப்பும் இல்லை
எப்பவோ முடிந்த காரியம்
நாம் அறியோம் முழுதும் உண்மை

## சீரடி சாயி பாபா

மக்களின் திட பகுதி நம்பிக்கை
விசுவாசத்துடன் என்னை யாசிக்கிறவனுடைய
ஆசையை என் சமாதி பூர்த்தி செய்யும்.

## அசரீரியான பரமாத்மா – பிரேமகுமாரிஸ்

பரமாத்மா பரமதந்தையின் தெய்வீக வடிவம் ஜோதிப்புள்ளி வடிவத்தைப் போன்றது. அவர் உலக உபகாரி என்பதால் அவரது பெயர் சிவன் ஆகும். துன்பத்தை அகற்றி சந்தோசத்தை அருள்பவரான பரமாத்மா சிவன் எல்லையற்ற சக்திகளினதும் தெய்வீகக் குணங்களினதும் கடல் ஆவார். இச் சங்கமயுகத்தில் பரமாத்மாவான கடவுள் உலக மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஒரு மனித சரீரத்தில் பிரவேசித்து ஞானத்தை வழங்குகிறார்.

## காயத்ரி

ஓம் பைரவாய வித்மஹே
ஹரிஹரப்ரம்ஹாத்மகாய தீமஹி
தந்நோ சொர்ணாகர்ஷண பைரவ ப்ரசோதயாத்
ஓம் பைரவாய வித்மஹே
ஆகர்ஷணாய தீமஹி
தந்நோ சொர்ணாகர்ஷண பைரவ ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீபைரவர் காயத்ரீ

ஓம் ஸ்வானத் வஜாய வித்மஹே
சூல ஹஸதாய தீமஹி
தந்நோ பைரவ ப்ரசோதயாத்

ஓம் தீக்ஷணதம்ஷ்ட்ராய வித்மஹே
க்ஷேத்ரபாலாய தீமஹி
தந்ரோந பைரவ ப்ரசோதயாத்

## தில்லைவாழ் தீட்சதர்கள் ஜபித்த பைரவ மந்திரம்

ஸ்வர்ண கால பைரவர் த்ரிசூல யுக்த பாணிதம்
வேதரூப ஸாரமேவ ஸ்ம்யுதம் மஹேச்வரம்
ஸ்மாச்ரி தேஷூஸர்வதாஸ மஸ்தஸ்து தாயினம்
மகீந்த்ரி வம்ச பூர்வ புண்யரூபிணம் ஸமாந்ரயே

இந்த மந்திரத்தைப் பாரயணம் செய்து வந்தால் இல்லத்தில் செல்வம் சேரும். பணக்கஷ்டம் இருக்காது. குடும்பத்திலும் நட்புறவிலும் தொழிலிலும் பகைமை பாராட்டி குரோத விரோதங்கள் நீங்க, சிவபெருமான் அக்னீ சுவவர் என்று திருநாமங்கொண்டு அருள்பாலிக்கும் தலங்களில் உள்ள பைரவர் அல்லது அக்னி பகவானுக்கு, தைலக் காப்பிட்டு ஆராதனை செய்தால் இப்படிப்பட்ட விரோதங்கள் விரைவில் அகலும்.

சொர்ணாகர்ஷண பைரவ ஸ்தோத்திரங்கள் சொர்ண ஆகர்ஷண பைரவரை வழிபடும்போது சொர்ண பைரவர் காயத்ரியையும் பைரவி காயத்ரியையும் ஓதி வந்தால் விரைவில் செல்வம் பெருகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ பீஷ்மாசாரியாரின் உபதேசம்

மஹாபாரதப் போர் முடிவடைந்ததும்
பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே சாட்சியாக இருக்க
ஸ்ரீ பீஷ்மாச்சாரியார் தர்மபுத்திரர்யுதிஷ்டிருக்கு
ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ர நாமத்தின் சிறப்பை
உபதேசித்தார். இம்மையில் சுகத்தையும்
மறுமையில் மோட்சத்தையும் அளிக்கும் மஹா
மந்திரம் - ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ர நாம மந்திரம்.

ஸ்ரீ ஆதி சங்கரர், ஸ்ரீ பராரசர பட்டர்,
ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் ஆகிய
பெரியோர்கள் ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ர நாமத்தின்
மகிமையை பாராட்டி உரையாற்றியுள்ளார்கள்.

ஸ்ரீ விஷ்ணுவின் ஆயிரம் நாமங்களை சொல்ல
முடியாதவர்கள் அல்லது சொல்ல நேரம்
கிடைக்காதவர்கள் சஹஸ்ர நாமத்தில்
"ஈஸ்வர உவாச" என்ற பகுதியில் சொல்லப்பட்ட

"ஸ்ரீ ராம ராம ராமேதி
ரமே ராமே மனோ ரமே
சஹஸ்ர நாம தத்துல்யம்
ராம நாம வரானனே"

என்ற ராம நாம மந்திரத்தை சொன்னாலே போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பும் அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுக்கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சகபாணி
அருள்வாமி அபிராமியே.

## வள்ளலார் வாக்கு

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடிதொழக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னாயிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்க கந்தவேள்
தண்முகத்துய்யமணி, எண்முகச்சைவமணி
ஷண்முகத் தெய்வமணியே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திரு கந்தையா மாணிக்கவாசகர் அவர்களின் வாழ்க்கை வரலாறு.

இயற்கை எழில் நிறைந்த இலங்காபுரித்தீவின் நெற்றித் திலகமென விளங்கும் யாழ்ப்பாணத்தில் கந்தையா செல்லம்மா தம்பதிகளுக்கு கனிஸ்ட புதல்வனாக 27.10.1940இல் பிறந்தார். இவருடன் ஐந்து பெண் சகோதரர்களும் ஒரு ஆண் சகோதரனும் பிறந்தனர்.

இவர் தனது உயர்தரப்படிப்பை முடித்தக் கொண்டு Industrial Development Board இல் கணக்காளராகப் பணி புரிந்தார். திருமணப் பருவம் அடைந்ததும் பத்மலோஜினியைத் தன் வாழ்க்கைத் துணைவியாக வரிந்து கொண்டார். பின்பு பட்டப்படிப்பிற்காக தம்பதிகள் இருவரும் 1972 செம்ரெம்பரில் லண்டன் வந்தடைந்தனர். இல்லற வாழ்க்கையின் சாட்சியாக 09.08.1976இல் அன்பு மகன் ஜனகன் பிறந்தான்.

அதன் பின் அவர் 1980இல் யாழ்ப்பாணம் வந்து குடும்பத்துடன் இணைந்தார். அதன் பின்பு 1997இல் திரும்பவும் லண்டன் வந்து குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். பின்பு 2007இல் சகோதரி டாக்டர் கௌரியின் வேண்டுகோளுக்கிணங்க கொல்செஸ்டருக்கு இடம்பெயர்ந்து சந்தோசமாக குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்ததும் ஸ்நானம் செய்ததும் காயத்திரி மந்திரம் எழுதுவார். இந்த மந்திரத்தை எழுதப்பழக்கிய ஜெயந்தா அவர்களுக்கும் காயத்திரி அம்பாளின் அருள் கிடைக்க வேண்டும். திடீரென 30.04.2017 அன்று எங்களை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டு இறையுலகம் சென்றார். அன்னாரின் அத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் இதயத் தெய்வம்

இல்லத் தலைவர் **திரு கந்தையா மாணிக்கவாசகர்** அவர்கள் 30.04.2017 அன்று சிவபதமடைந்த செய்தி அறிந்து உள்ளூர், வெளிநாடுகளில் இருந்தும் தொலைத் தொடர்புகள் மூலம் அனுதாபங்கள் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், வெளி நாடுகளில் இருந்தும் எமது இல்லம் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் கிரியைகளின் போதும் ஏனைய வழிகளிலும் உதவியவர்களுக்கும், ஈமைக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மலர்வளையங்கள், மலர்மாலைகள் வைத்தும் மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் அனைவருக்கம் பணிவுடன் நன்றி நவில்கின்றோம்.

இங்ஙனம்

**மனைவி, மகன், மருமகள், பேத்திமார், சகோதரர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print www.jrdigitals.com T : 0208 503 6643